தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2022
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
The Tamil Competition 2022
The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.

# திருக்குறள் போட்டி

இணைப்பு: 15

## விசேட மத்திய பிரிவு (10 வயதின் கீழ்)

(பிறந்த திகதி: 30.06.2012க்குப்பின் பிறந்தோர்)

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

## அதிகாரம் 60 - ஊக்கம் உடைமை

குறள் 591

**உடையர் எனப்படுவது ஊக்கம்அ∴து இல்லார்
உடையது உடையரோ மற்று?**

***இதன்பொருள்*** - ஒருவர் பெற்றிருக்கின்றார் என்று சொல்லத்தக்க சிறப்புடையது ஊக்கமாகும், ஊக்கம் இல்லாதவர் வேறு எதைப் பெற்றிருந்தாலும் அதை உடையவர் ஆவரோ?

குறள் 592

**உள்ளம் உடைமை உடைமை; பொருள்உடைமை
நில்லாது நீங்கி விடும்.**

***இதன்பொருள்*** - ஒருவர்க்கு ஊக்கமுடைமையே நிலையான உடைமையாகும், மற்றப் பொருளுடைமையானது நிலைபேறு இல்லாமல் நீங்கிவிடுவதாகும்.

குறள் 593

**ஆக்கம் இழந்தேம்என்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துஉடை யார்.**

***இதன்பொருள்*** - ஊக்கத்தை உறுதியாகத் தம்கைப் பொருளாக உடையவர், ஆக்கம் இழந்து விட்ட காலத்திலும் இழந்து விட்டோம் என்று கலங்க மாட்டார்.

குறள் 594

**ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை.**

***இதன்பொருள்*** - சோர்வு இல்லாத ஊக்கம் உடையவனிடத்தில் ஆக்கமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழிக் கேட்டுக்கொண்டு போய்ச் சேரும்.

குறள் 595

**வெள்ளத்து அனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.**

***இதன்பொருள்*** - நீர்ப்பூக்களின் தாளின் நீளம் அவை நின்ற நீரின் அளவினவாகும், மக்களின் ஊக்கத்தின் அளவினதாகும் வாழ்க்கையின் உயர்வு.

நன்றி, வணக்கம்.

*(**மூலம்: “திருக்குறள் தெளிவுரை”**, டாக்டர்.மு.வரதராசனார், திருத்திய 144ஆவது பதிப்பு நவம்பர் 1998.)*